"உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு." - குறள்:- 734.

பொருள்:- பசி, பிணி, பகையில்லாமல் அமைதியுடன் வாழ்வதே சிறந்த நாடு.



# தமிழ் எழில்



## கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு.

எழில் 08 திருவள்ளுவர் ஆண்டு 2050 இலக்கிய இதழ் - முத்திங்கள். மேழம் - ஆடவை (சித்திரை - ஆனி)

# 'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்'

*"நல்ல பண்பு நலிகிறது."*

சங்ககாலம் ஒரு பொற்காலப் புகழ்க் காலமாக இன்றைக்கும் போற்றப் படுகிறது. இந்தப் பெருமைகளைக் கருதித்தான் நமது சுப்புரத்தின புரட்சிக்கவிஞனும், 'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்று சூளுரைத்தான். அவனுடைய வீரச் சூளுரையின் பொருள் என்ன என்றால், - தமிழர்கள் மீண்டும் தலையோங்கி நிமிர வேண்டுமானால் அவர்கள் தலையோங்கி வாழ்ந்த காலத்தின் அரிய பெரிய நடைமுறைகளை இக்காலத்தாரும் எதிர்காலத்தாரும் ஏற்றுப் பின்பற்ற வேண்டும் என்பதே பொருள்.

கட்டுப்படுத்தப்படாத வெட்டுக்கிளிகளின் கூட்டம் பசிய இளம்பயிரையே வெட்டி அழித்து விடுகிறது கடிவாளம் மாட்டாத முரட்டுக் குதிரை தாறுமாறாக துள்ளிக் குதித்துத் தன்மேல் ஏறி இருப்பவனையே சேற்றிலே தள்ளிவிடுகிறது, கரை இல்லாத காட்டாற்று....

>> 03

## செப்பும் மொழியைச் செப்பம் செய்வோம்.

'சட்டியில் இருந்தால்தானே அகைப்பையில் வரும்' என்று பேசுவது வழக்கம். சட்டியில் சோறோ வேறு உணவுப் பண்டமோ இருந்தால்தானே அகைப்பையில் எடுக்க முடியும் என்பது இதற்குப் பொருள். ஆனால் இந்த எளிய செய்தியைச் சொல்வதற்குத்தான் இந்தப் பழமொழி வந்ததா? இல்லை! திருமணமாகி, குழந்தைப்பேறு இல்லாதிருப்பவர்கள் கந்தர் சச்டி நோன்பு இருந்தால், உடலின் அகத்தில் இருக்கும் கர்ப்பப்பையில் குழந்தை வரும் என்று குறிப்பிட 'சச்டியில் நோன்பு இருந்தால் அகப்பையில் வரும்' என்பதே பக்தி பூர்வமாகச் சொல்லப்பட்ட மொழி.

வட மொழியில் 'புஸ்தகம்' என்பதைப் 'புத்தகம்' என்று கூறுவதைப்போல, 'கந்தர் சச்டி நோன்பு' என்பதை அக்காலத்தில் 'கந்தர் சட்டி நோன்பு' என்பார்கள். இதன் அடிப்படையில் வந்ததுதான் இந்தப்பொன்மொழி.

குமரி அனந்தன்
நூல் : தமிழ் தரும் காட்சிகள்.

## தடுமாறுகிறதே தமிழ் உரைநடை
## கொல்லப்பட்ட கலைச் சொற்கள்

நம்மால் அழிக்கப்பட்ட கலைச் சொற்கள் சில இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

இக் காலத்தில் இரும்பால் மட்டுமே செய்யப்படும் அச்சு, ஆணி போன்ற பல, முந் காலத்தில் மரத்தினாலேயே செய்யப்பட்டன. இரும்பு அச்சு இற்றுப் போனால் அதனைக் காய்ச்சித் தட்டியோ, பற்ற வைத்தோ சரி செய்து கொள்ளலாம். ஆனால் மர அச்சு முறிந்து போனால், அதைச் சரி செய்யவே முடியாது. அதனால் வண்டிகளில் மாற்று அச்சு ஒன்றை எப்போதும் வைத்திருப்பர். அதற்குச் சேம அச்சு என்பது பெயர். இக் கால உந்து வண்டிகளில் சக்கரம் எனப்படும் ஆழியை எப்போதும் சேமத்தில் வைத்திருப்பது போன்றது அது.

இன்னும் பல வேலைப்பாடுகளில் மர ஆணியையே தச்சர் பயன்படுத்தக் காண முடியும். பெரும்பாலும் தேர்ந்த மூங்கிலிலிருந்து ஆணி செய்வர் எனக் கருதுகிறோம். அதுவே தரமும், திறமும் வாய்ந்ததாக இருக்கும். அதனாற்றான் உறுதியான ஏற்ற விடையை ஆணித்தரமான விடை என்கிறோம் அச்சாணி என்பதற்கும் அச்சாகிய ஆணி என்றும், அச்சின்கண் ]டப்படும்

>> 03

## தமிழுக்குரிய 16 வகைச் சிறப்புக்கள்

- பெயர்ச் சிறப்பு
- எளிமைச் சிறப்பு
- தொன்மைச் சிறப்பு
- எழுத்துச் சிறப்பு
- ஒலிச் சிறப்பு
- கலைச் சிறப்பு
- இசைச் சிறப்பு
- இலக்கியச் சிறப்பு
- இன்னிசை சிறப்பு
- தனிமைச் சிறப்பு
- சுழிச் சிறப்பு
- சொற் சிறப்பு
- கவிதைச் சிறப்பு
- மருத்துவச் சிறப்பு
- நாடகச் சிறப்பு
- இலக்கணச் சிறப்பு

## திங்களின் (மாதங்களின்) தமிழ்ப் பெயர்கள்.

| | | |
|---|---|---|
| தை | - | சுறவம் |
| மாசி | - | கும்பம் |
| பங்குனி | - | மீனம் |
| சித்திரை | - | மேழம் |
| வைகாசி | - | விடை |
| ஆணி | - | ஆடவை |
| ஆடி | - | கடகம் |
| ஆவணி | - | மடங்கல் |
| புரட்டாதி | - | கன்னி |
| ஐப்பசி | - | துலை |
| கார்த்திகை | - | நளி |
| மார்கழி | - | சிலை |

## எழுதிப்படிக்கும் சொற்பொழிவும் உணர்ச்சி மிகுந்த சொற்பொழிவும்.

நாட்டின் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் பொறுப்பான கடமைகளைக் குறித்துக் கூடிய கூட்டங்களில் பேசும்போது, எழுதிப் படிக்கும் வழக்கத்தைக் கையாளுகிறார்கள். பல்கலைக் கழகங்களின் பட்டமளிப்பு விழாப் பேச்சுக்கள், மாநாடுகளில் தலைமையுரைகள் முதலியவைகளும் எழுதிப் படிக்கப்படுகின்றன. இத்தகைய சொற்பொழிவாளர்களை அவை நடுக்கம் உடையவர்கள் என்று கூறல் பொருந்தாது. உண்மையை நோக்கினால், இவர்கள் எழுதிப் படிப்பதைவிட எழுதாமலே அழகாகப் பேசும் திறன் உள்ளவர்கள், ஆயினும் பொது நன்மையைக் கருதி ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு எழுதிப் படிக்கிறார்கள். கட்டுப்பாட்டை ஒரு கலையாக வளர்த்துள்ள ஆங்கில நாட்டில் சிறந்த பேச்சாளர்ாக உள்ளவர்களும்......

>> 03

## எங்கும் எதிலும் தமிழ் வளர்க்க உறுதி கொண்ட உள மாற்றமே தேவை.

முனைவர். மு.வ

எங்கும் எதிலும் தமிழ் வளர்க்க உறுதி கொண்ட உள மாற்றமே தேவை. இந்த இடத்தில் அமைதியானவர். ஆர்ப்பாட்ட மில்லா-தவர் என்று பெயரெடுத்த முனைவர் மு.வர-தராசன் அவர்களின் கருத்தை அப்படியே தருகிறேன்.

மறுபடியும் செயலாற்ற முன் வருவோம்.

1. திருக்குறள் ஓதியே திருமணம் நிகழவேண்டும். தமிழ் நாட்டுக் கோயில்களில் உத்தமர்களின் தமிழ்ப் பாட்டு முழங்கவேண்டும். அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும். ஆளுநர் தமிழில் கையெழுத்திட வேண்டும். என்னும் இவைகளை ஒருநாளும் வீண்கனவு என்று ஒதுக்கவே மாட்டேன். தமிழுக்கோ, தமிழ்நாட்டுக்கோ பகைவனாக இருப்பவன் தான் இந்த நல்ல எண்ணங்களை வீண்கனவு என்று குறை கூறுவான். நம் தாயை நாம் வழிபட்டு, நம் குடும்பக் கடமையை நாம் ஆர்வத்தோடு செய்யும் போது இதை தவறு என்றும் குறுகிய நோக்கம் என்றும் ஒருவன் குறுக்கிடுவானால் அவனைப் பகைவன் என்று ஒதுக்குவதே கடமையாகும்.

'கொடுத்தும் கொள்ளல் வேண்டும் மன்ற
அடுத்திருந்த மாணாத செய்வான் பகை'

என்று நம் தலைவர் திருவள்ளுவர் ஆணையிட்டது இப்படிப்பட்ட பகைவர்களைக் கருத்தித்தான்.....

>> 04

## மாணவர்க்கு.. ஓய்விலும் தயாராதல்.

தேர்விற்கான தயாரிப்பில் இருக்கும்போது எடுத்துக் கொள்கின்ற ஓய்வு நேரத்தை படிப்பு சாராத வேறு தகவல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. ஆனால், பெரும்பாலன மாணவர்கள் அந்த நேரத்தை தொலைக்காட்சியில் விரும்பிய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும், வீட்டில் உள்ளவர்களோடும், நண்பர்களோடும் சேர்ந்து அரட்டையடிப்பதற்கும் செலவிடு -கின்றனர்....

>> 02




## வள்ளலாரும் அருட்பாவும். - வியப்புக்குரியவை.

1. ஓராண்டுப் பருவத்திலே தில்லையில் திரை தூக்கத் தரிசித்தது.
2. திண்ணையிலிருந்து புரண்டு கீழே விழுந்தபோது விழாமல் தடுத்து இறைவி காப்பாற்றிது.
3. ஐந்த வயதில் பள்ளிக்குச் சென்றும் படிப்பில் கவனமில்லாது இறை நினைவே கொண்டிருந்தது.....

>> 04

## வாழ்வை விரும்புகிறீர்களா? பொழுதை வீணாக்காதீர்கள் ஏனெனில் பொழுதால் ஆனதே வாழ்வு!

செந்தமிழ் அந்தனர் இரா.இளங்குமரனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரிடம் சொல்லி அழுவது. சிந்திப்பார்களா.

தாழ்வு மனப்பான்மையின் நேரடி விளைவுதான் தாய்மொழிப்பற்றின்மை. அலுவலகங்களில் பள்ளிகளில் தமிழை முழுமையாக பயன்படுத்தாமைக்கு தமிழரிடமுள்ள மொழிப்பற்றின்மை மிக முக்கிய காரணமாகும்.

இரண்டு சிங்களச் சகோதரர் சிங்கள மொழியில் பேசிக் கொள்கின்றனர். அவர்கள் ஆங்கிலத்தில் வல்லவராய் இருந்தாலும் தம்தாய்மொழியிலேயே பற்று வைத்து அம்மொழியிலேயே பேசுகின்றனர். சிங்களப் பகுதிகளில் உள்ள அரச பணிமனைகளுக்கு சென்று பார்ப்போமாயின் கோப்புக்களில் ஒரு ஆங்கிலச் சொல்லைக் கூட பயன்படுத்தாமல் சிங்களச் சொல்லையே பயன்படுத்துவதைக் காணலாம். அவர்களின் பணிமனைகள் உற்பத்தித்திறன் போட்டிகளில் முழுமையாக சிங்கள மொழியைப் பயன்படுத்தி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். சிங்கள மொழியை தொலைக்கவில்லை. இங்கே உற்பத்தித்திறன் போட்டிக்காக தமிழைத் தொலைத்து ஆங்கிலத்தைப் பயன்படுத்தி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

இந்தியாவின் வடநாட்டில் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. வடநாட்டினர் அடியோடு ஆங்கிலத்தை வெறுக்கின்றனர். ஆங்கில மொழி வெளியேற்றப்படும்.(ஆங்கிலேசு அட்டாவோ) என்று அங்கே முழக்கமிடுகின்றனர்.

தமிழர்கள் தமிழ்ச் சொற்களான 'அம்மா'வையும் 'அப்பா'வையும் வெளியேற்றத் தொடங்கியுள்ளனர். 'மம்மி'யையும் 'டாடி'யையும் தம் செல்வங்களின் நாவில் பயில விடுகின்றனர்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழில் கற்பிக்கும் வாய்ப்பு இருந்தும் தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் கற்பதையே விரும்புகின்றனர். அதற்காக பெரும் பொருள் செலவிடுகிறார்கள்.

பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் வைப்பதில்லை. வேற்று மொழிகளில் பெயர் வைக்கின்றனர். பெயர் தமிழில் இருந்தாலும் தந்தையின் முதலெழுத்தை அப்பன் ஆங்கிலேயனுக்கு பிறந்தது போல ஆங்கிலத்தில் முதல் எழுத்தை இடுகின்றனர் கல்வியியளாளர்கள் அறிவுடையார் கூட இவ்வாறே செய்கின்றனர்.

தமிழ்த் திருமணம் செய்விக்கும் தொண்டர்கள் இங்கு இருக்கிறார்கள். ஆனால் அவர்களைஅழைத்துத் தமிழில் திருமணம் செய்விக்கும்படி கூறுவோர் மிக மிகச் சிலரே.

தாய்மொழியை இப்படிக் கேவலப்படுத்தும் இனம் உலகிலேயே வேறு எங்கும் இல்லை. இதை யாரிடம் சொல்லி அழுவது. சிந்திப்பார்களா.

இதழ் ஆசிரியர்.

## சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே

### அமர்க்களம்

அமர் என்பது போர். சமர் என்பதும் போரைக் குறிக்கும். செரு என்பதும் போரே. போர்க்களம் இரைச்சலுடன் கூட்டம் நிறைந்த இடமாயிருக்கும். கூட்டமும் இரைச்சலும் உடையதை "ஒரே அமக்களமா இருக்கிறதே" என்று சொல்கிறார்கள். இந்த அமக்களம் என்னுஞ் சொல்லுக்குப் பொருளில்லை, அமர்க்களம் என்றே சொல்ல வேண்டும்.

### வாளா இரு

சும்மா இரு என்று சொல்லலாமா? சில நேரம் அப்படிச் சொல்ல நேர்வது உண்டு. "அக்கடான்னு கிட" என்று சிலரைப் பார்த்துச் சிலர் சொல்கிறார்கள். "நான் பாட்லே அக்கடான்னு கெடந்தேன் வம்பு தானா வந்தது." என்றால் என்ன? நான் வாளாயிருந்தேன். வம்பு தானாக வந்தது என்பதுதானே? ஆகவே அக்கடா எனும் கன்னடம் நீக்கி வாளாயிருத்தல் கைக்கொள்ளலாம்.

கவிக்கோஞானச்செல்வன்

## குறளோவியம்



ஒருநாள் மாலைப்பொழுது! ஏரிக்கரை ஓரமாக வள்ளுவர் மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனை. சற்று நிற்பார். மீண்டும் நடப்பார். அவரைக் கடந்து இருவர் ஏதோ வாயாடிக்கொண்டு போயினர்.

'யாரப்பா இந்த ஆள்? எப்போது பார்த்தாலும் ஏரிக்கரை, குளக்கரை, மலைப்பாறை என்று அலைந்து கொண்டேயிருக்கிறான். வானைப் பார்க்கிறான். பூமியைப் பார்க்கிறான். நெற்றியைச் சுருக்குகிறான். யார் இது?' இப்படி ஒருவன் கேட்க, மற்றவன் ஏளனமாக விளக்கமளித்தான்.

'வள்ளுவனாம்! அதிலும் சாதாரன வள்ளுவன் இல்லையாம்! திருவள்ளுவனாம்! சிந்திக்கிறானாம்... அறநூல் எழுதுகிறானாம். கிறுக்கன்! எத்தனையோ பித்தர்களில் இவன் ஒரு பித்தன்!'

சிந்தனை கலைந்தது வள்ளுவப் பெரியாருக்கு! செவியில் விழுந்தது அவர்கள் வாரியிறைத்த வசைமொழி! இழிமொழி! அவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவர்கள் வள்ளுவரை நோக்கி ஏகடியம் செய்துகொண்டே போய்விட்டனர். ஏரியோரத்தில் சிலர் கழனி வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தனர். ஒரு பகுதியில்! கழனியில் உழுது கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கிணறு தோண்டிக் கொண்டிருந்தனர் மற்றொரு பகுதியில்! அனைத்தையும் பார்த்த வள்ளுவருக்கு ஒரு அழகான உவமைக் குறள் கிடைத்தது.

'தன்னை வெட்டியும் தோண்டியும் புண்படுத்துகிறவரையும் நிலம் பொறுத்துக்கொண்டு அவர்களையும் தன்மீதே தாங்கி நிற்கிறதல்லவா? அதைப் போலத்தான் நம்மை இகழ்ந்து பேசுகின்றவர்களையும் பொறுத்துக் கொள்வது நம் தலையாய பண்பாகும்' என்று தனக்குத்தானே வள்ளுவர் சொல்லிக் கொண்டார். குறள் பிறந்துவிட்டது.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.' (குறள் : 151)

நெஞ்சில் இந்தக் குறளை எழுதிக்கொண்ட வள்ளுவர், நிலமகளைப் பார்த்து ஒரு கேள்விக் கணையைத் தொடுத்தார். 'நிலமகளே, உன்னைத் துன்புறுத்துவோரை நீ பொறுத்துத் தாங்கிக் கொள்கிறாய்! உன்னைப் பார்த்து நானும் என்னை என் எதிரில் இகழ்ந்து பேசியோரைப் பொறுத்துக் கொண்டேன். ஆனால் எனக்கு ஒரு ஐயப்பாடு! அதனை நிலமகளே, நீ எனக்கு விளக்குவாயாக! நேரில் பழிச்சொல் கூறுவோர் ஒருபுறமிருக்க, ஒருவர் நேரில் இல்லாதபோது அவர்மீது பழிச்சொல் கூறுவதைச் சிலர் தங்கள் வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறார்களே, அத்தகையோர் உடல் பாரத்தையும் சுமப்பதுதான் உனக்கு அறம் என்று நீ கருதிக் கொண்டிருக்கிறாயா?'

வள்ளுவர் கேட்ட இந்தக் கேள்வியும் ஒரு குறளாக வடிவெடுத்துவிடுகிறது.

'அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.' (குறள் : 189)

கலைஞர் மு.கருணாநிதி

### ஓய்விலும்.....

இதனால் தொடர் படிப்பிற்கிடையே ஓய்வு எடுத்துக்கொள்வதன் நோக்கம் சிதறிவிடுவதோடு தொடர்ந்து படிப்பதிலும், தேர்விற்காக தயாராவதிலும் மட்டுமே இருக்க வேண்டிய கவனம் திசை மாறிவிடுகிறது.

தொடர் படிப்பிற்கிடையே நீங்கள் எடுத்துக் கொள்கிற ஓய்வு உங்களை புதுப்பித்துக் கொள்வதற்காக மட்டுமே இருக்க வேண்டும். மூளையைத் தூண்டுதல், கையெழுத்தை மேம்படுத்துதல், தேர்விற்கான தயாரிப்பை அளவிடுதல் போன்ற படிப்பு சார்ந்த பயிற்சிகளை ஓய்வு நேரத்தில் செய்வதன் மூலம் தொடர்ந்து தேர்விற்கான தயாரிப்பிலேயே இருக்க முடியும்.

### கையெழுத்தை மேம்படுத்தல்.

படிப்பறிவற்ற ஒருவன் பக்கத்து ஊரில் உள்ள தன் உறவினனுக்கு கடிதம் போடத் தீர்மானித்தான். அதற்காக முல்லாவிடம் வந்த அவன், 'என் உறவினனுக்கு ஒரு கடிதம் எழுதிப்போட வேண்டும். அதை நீங்கள் தான் எழுதித் தர வேண்டும்' என்றான்.

அதற்கு முல்லா, 'எனக்கு கால் வலிக்கும். அதனால் எழுத முடியாது' என்றார். இதைக் கேட்டு ஆச்சரியத் தோடு முல்லாவைப் பார்த்தவன், 'கால் வலிக்கும், கடிதம் எழுதுவதற்கும் என்ன சம்பந்தம்?' என்றான். அதற்கு முல்லா, 'மற்றவர்கள் என் எழுத்தைப் படிக்க முடியாது. அதை என்னால் மட்டும் தான் படிக்க முடியும் என்பதால் இந்த கடிதத்தை உரியவரிடம் படித்துக் காட்ட நான் அந்த ஊருக்குப் போவதென்றால் எனக்கு கால் வலிக்காதா?' என்றார்.

இந்தக் கதையில் வரும் முல்லா சொல்வதைப் போல தேர்வில் நீங்கள் எழுதியதைப் படித்துக் காட்ட நீங்கள்தான் போகவேண்டும் என்ற நிலையில் உங்களுடைய கையெழுத்து இருந்தால் நிச்சயம் மதிப்பெண்கள் குறைந்து விடும். ஏனென்றால், தேர்வில் எழுதுகின்ற விடைகளுக்கு மட்டும் மதிப்பெண்கள் தரப்படுவதில்லை. விடைகளுக்கு முன்னால் வாசி மதிப்பெண்களும் அதை எழுதிய முறை, எழுதிய விதம், கையெழுத்து போன்றவைகளுக்கு மீதி மதிப்பெண்களும் தரப்படுகின்றன. எனவே படித்ததை தேர்வுகளில் எழுத்தாக்கும் போது தெளிவாகவும், நேராகவும் திருத்துபவர் புரிந்துகொள்ளும்படியாகவும் எழுத வேண்டும். இதன் மூலம் விடைகளில் செய்யும் சிறு தவறுகளுக்காக இழக்கும் மதிப்பெண்ணை கையெழுத்திற்காகப் பெறும் மதிப்பெண்ணைக் கொண்டு ஈடுகட்டி விட முடியும்.

நல்ல அழகான கையெழுத்து வர வேண்டுமானால் தொடர்ந்து எழுதிப் பழக வேண்டும். 'சித்திரம் கைப் பழக்கம்' என்பதற்கேற்ப நாள்தோறும் சிறிது நேரம் ஒதுக்கி எழுத்துப் பயிற்சியை செய்து வந்தால் அழகான கையெழுத்தை நம் வசமாக்கிக்கொள்ள முடியும்.

எழுத்துப் பயிற்சியையும் சுவாசப் பயிற்சியைப் போல படிப்பிற்கிடையேயான ஓய்வு நேரத்தில் செய்து பழகலாம். பக்கம், பக்கமாகவோ, பெரிய, பெரிய வாக்கியங்களாகவோ இல்லாமல் தேர்விற்காகப் படித்த பாடங்களில் உள்ள சமன்பாடுகள், சூத்திரங்கள், குறியீடுகள், மேற்கோள்களை நினைவுபடுத்தி எழுதிப் பார்க்கலாம். இதனால் எழுத்துப் பயிற்சி கிடைப்பதோடு மேற்கூறியவைகளை எழுதும்போது ஏற்படக்கூடிய தவறுகளையும் கண்டறிந்து திருத்திக்கொள்ள முடியும். குறிப்பாக பாடநூலில் இருப்பதை அப்படியே நினைவில் கொள்ள வேண்டிய வரையறைகளை எழுதிப் பார்ப்பது இரட்டிப்பு நன்மை தரும்.

**தலைபழுத்த ஆள்களிலே தமிழன் சான்றோன்,**
**தலைநிமிர்ந்த உயர்திணையில் அவனே மூத்தோன்!**

முனைவர் சாலை இளந்திரையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதிப்படிக்கும்...

இவ்வாறு எழுதி படிக்கும் வழக்கத்தைப் புறக்கணிப்பதில்லை.

மனிதன் தன் உணர்ச்சியை நம்ப முடியாமல் அறிவை நம்பிச் செய்யும் ஏற்பாடுகளில் இது ஒன்று ஆகும். கூட்டத்தில் நின்று பேசுவதனால், கூட்டத்தினரின் உணர்ச்சி அவர்களுடைய முகக் குறிப்பாலும் ஆரவாரத்தாலும் வெளிப்பட்டுப் பேசுவோரிடம் செல்லும், பேசுவோரின் உணர்ச்சியும், அவருடைய முகக் குறிப்பு உடலசைவு முதலியவற்றால் வெளிப்பட்டுக் கூட்டத்தினரைச் சேரும். எந்த உணர்ச்சி எப்போது எவ்வாறு தோன்றிடுமோ, அதனால் தாம் மேற்கொண்ட பொறுப்பான நிலையினின்றும் நெகிழ நேருமோ என்று பொறுப்பு உணர்ந்தவர்கள் கவலை கொண்ட காரணத்தாலேயே, மிக்க உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் அறிவின் துணையால் ஒழுங்காக எழுதிப் படிக்கத் தொடங்கினார்கள். முன்னமே எண்ணி எழுதிய காரணத்தால், எழுதும்போது உணர்ச்சி குறைந்திருக்கும், படிக்கும்போது இன்னும் குறையும், ஆகையால் அவருடைய முகக் குறிப்பு முதலியவை கூட்டத்தினரைச் சேர்த்து அவர்களுடைய உணர்ச்சியைத் தூண்ட வழி இல்லை, கூட்டத்தினர் ஏதேனும் உணர்ச்சி உற்ற போதிலும், அந்த உணர்ச்சி பேசுவோரின் கண்ணை ஈர்க்காது, ஒருகால் ஈர்த்தாலும், அதனால் அவர் முன்னமே எழுதி வைத்துள்ள கருத்தை மாற்றல் இயலாது. ஆகையால் முன்னேற்பாடாகச் செய்துள்ளவை ஒழுங்காக நடைபெறும், ஆரவாரமான பேச்சையும் உணர்ச்சிப் பெருக்கையும் விடப் பொறுப்பான கடமையே பெரிது எனக்கொண்ட காரணத்தால், மேடையில் அந்த நேரத்தில் அவர்களுக்குப் பெரிய மகிழ்ச்சி விளையாவிட்டாலும், பிறகு கடமையின்பம் விளையும். மற்றொரு நன்மையும் உள்ளது, எழுதிப்படிக்காவிட்டால், பேசுவோர் முன்பு எண்ணிய கருத்தையே உணர்ச்சி காரணமாகத் திரித்துக் கூற இடம் உண்டு, அவர் உள்ளவாறே பேசிய போதிலும், கேட்போர் தம் உணர்ச்சி காரணமாக அதையே திரித்து உணரவும் இடம் உண்டு, இந்த இருவகைத் திரிபுக்கும் எழுதிப் படிக்கும் முறையில் இடம் இல்லை. இவ்வாறு உணர்ச்சியை நம்பாமல் அறிவை நம்பித் துணையாகக் கொண்டதாலேயே எழுதிப் படிக்கும் சொற்பொழிவு முறை தோன்றியது.

முனைவர் மு.வரதராசன்
நூல் :- இலக்கிய ஆராய்ச்சி

## தமிழ் அறிவோம்.

Medicable - மருத்துவநலப் பேற்றுக்குகந்த
Medical anthropology - மருத்துவ - மாந்தரியல்.
Medical Care - மருத்துவக்காப்பு, மருத்துவக்கவனிப்பு
Medical climatology - மருத்துவக் காலநிலையியல்
Medical concession - மருத்துவச் சலுகை
Medical ecology - மருத்துவச் சூழ்நிலையியல்
Medical gymnastics - மருத்துவ உடற்பயிற்சிகள்.
Medical jurisprudence - மருத்துவச் சட்டவியல்.
Medical plants - மருத்துவ மூலிகைகள்
Medical protozoology - மருத்துவமுந்துவிலங்குரியிரியியல்.
Medical Sociology - மருத்துவக் குமுகவியல்
Medicament - குணப்படுத்தும் மருந்து
Medicinal oil - மருந்து நெய்யம்
Nurse - செவிலி

அருங்கலைச் சொற்களஞ்சியம்,
தமிழ் பல்கலைக் கழகம்.

## வடசொல் தமிழ்ச் சொல் அகரவரிசைச் சுருக்கம்.

பிரமை – மயக்கம்
பிராமணன் - பார்ப்பான்
பிரபு – பெருந்தகை
மூர்த்தி – கடவுள்
வசீகரம் - கவர்ச்சி
வருடம் - ஆண்டு
பிரபஞ்சம் - உலகம்
அக்கினி – நெருப்பு
அங்கவீனன் - உடற்கேடன்
அகாலமரணம் - முதிராச்சாவு
கர்வம் - செருக்கு
சவம் - பிணம்
சாடி - தாழி
ஆசீர்வாதம் - வாழ்த்துரை
ஆதியந்தம் - அடிமுதல்
கிடாரம் - கொப்பரை
யாகம் - வேள்வி
ரசம் - சுவை
தைலம் - எண்ணெய்
விவாதம் - வழக்கு
வைபவம் - கொண்டாட்டம்
விதி - ஊழ்
அத்திபாரம் - கடைக்கால்
அதிகம் - மிகுதி
சாதம் - சோறு
கமலம் - தாமரை
கீதம் - இசை

பொக்கிசம் - பொருட்களஞ்சியம்
துரோகம் -அரண்டகம், வஞ்சனை

## தடுமாறுதே..

ஆணி என்றும் பொருள் கூறுவர். முதற் பொருளுக்கு ஆணியே அச்சாகவும் அமைக்கப்படுகிறது என்பது பொருளாம். அப்படியானால் ஆணி என்பதே உறுதி வாய்ந்த மரப் பகுதியைக் குறிக்கும் போலும். இன்றும் கோயில் தேர்களில் மர அச்சே அமைந்திருப்பதைக் காண்க. முதற்காலச் சகடம் எனப்படும் வண்டிகளிலும் மர அச்சே பொருத்தப் பட்டிருந்தது.

இது போன்ற தொழில்நுட்பம் வாய்ந்த கலைச் - சொற்கள் பற்பல மடிந்து கொண்டிருக்கின்றன. உழவர் குடிப் பிறந்த யாம் அச் சூழலிலிருந்து நகர வாழ்க்கையை மேற்கொண்டு அறுபது ஆண்டுகளுக்கு மேலான இக் காலத்தில் எம் நினைவில் எஞ்சியிருப்பனவற்றில் மறையும் கலைச் சொற்கள் சில :-

**ஏர்கால்** : இது மாட்டு வண்டியில் ஆள் ஏறி அமர்ந்து வண்டியை ஓட்டப் பயன்படும். இது வண்டியின் பின் கடையிலிருந்து முன் நுனிவரை நீண்டிருக்கும்.

**முக் கணி** : ஏர்காலின் முன் நுனியில் அது தரையைத் தொட்டு விடாதபடி ஏறக் குறைய இரண்டடி உயரத்தில் அமைக்கப்படுவது.

முனைவர் மா.நன்னன்

## நல்ல பண்பு...

வெள்ளம் பயிர்களை அழிப்பதோடு வளமான நிலங்களையே வறட்சித் திட்டுகளாக உருமாற்றிப் போட்டுவிடுகிறது.

இவை கண்ணுக்குத் தெரியும் அன்றாடக் காட்சிகள். ஆட்சித் தலைவர்கள் தட்டிக் கேட்பார் இல்லாமல் எட்டி எட்டிப் போய்விடுவதால் ஒட்டுமொத்தமான சமுதாயமே உருக்குலைந்து போகிறது. இந்த அழிநிகழ்ச்சி மெதுவே மெதுவே நடைபெறுவதால் சாதாரணமானவர்கள் இதைப் புரிந்து கொள்வது இல்லை. அறிஞர்கள் அன்றாடம் புரிந்துகொள்ளுகிறார்கள். அடிமனத்தில் இருந்து எழுகின்ற திருத்தும் குரலைத் தட்டிக்கேட்கும் குரலாக எழுப்புகிறார்கள்.

**தமிழர்கள் கவனிக்க..**

விளைவைத்தான் பார்க்கிறோமே: நாட்டு மக்களிலே 45 விழுக்காடு பட்டினிக் கோட்டுக்குக் கீழே: நமது பட்டணங்களிலே கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற பெருங்குற்றங்கள் வரையறுத்த எல்லைக்கோட்டுக்கும் மேலே: கலை என்ற பெயரிலும் இலக்கியம். பத்திரிகை என்னும் பெயர்களிலும் மக்களின் வாழ்விலே தாழ்வு பரப்பும் தடியர்களின் எண்ணிக்கை, இருக்க வேண்டிய அளவை விட ஏகப்பட்ட அளவு மேலே! இந்தக் கீழே கீழேக்களாலும் மேலே மேலேக்களாலும் தமிழரின் வாழ்வே தலைசிதறிக் கிடக்கும் போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருப்பவர்கள் அஞ்சாமல் அயராமல் நடத்திவைக்கும் ஆர்ப்பாட்டங்கள் எந்தக் கட்டுப்பாட்டிலும் இல்லை. இது கவனத்துக்கு உரியது. அனைத்துத் தமிழர்களின் அவசரமான கவனத்துக்கு உரியது.

முனைவர் சலாய் இளந்திரயன்.
நூல் :- நாட்டிலும் ஏட்டிலும் தமிழர்கள்.

## சென்ற இதழ் தொடர்

## உடையது விளம்பேல்

இருப்பதை வெளியில் சொல்லாமல் ஒளித்து ஒளித்துப் பழகிவிட்டால், நாளடைவில் அந்தக் குணம் அவனுடைய வளர்ச்சிக்கே தடையாகிவிடும். தன்னிடம் இருக்கின்ற ஆற்றலைக்கூட வெளிப்படுத்தாமல் அடக்கி ஒளித்து அவன் அழிந்துவிடுகிறான். ஆகவே உடையது விளம்பேல் என்பதற்கு, இருப்பதை வெளியில் சொல்லாதே என்னும் பொருள் சற்றும் பொருந்தாது.

இருப்பது வெளியில் தெரிந்தால் திருடர்களால் அந்தப் பொருள் பறிக்கப்படுமோ என எண்ணி, இருப்பதை வெளியில் சொல்லாதே என்று அறிவுரை சொன்னதாக ஒரு விளக்கம் கூற முற்படலாம்.

ஆசிரியர்க்கு அது கருத்தாக இருந்தால் 'விளம்பேல்' என்று பொதுவாகச் சொல்லாமல் 'கள்வர்க்கு விளம்பேல்' என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்க வேண்டும். எப்படிப் பார்த்தாலும் 'உடையது விளம்பேல்' என்ற தொடருக்கு வேறு நல்ல பொருள் இருக்க வேண்டும் என்று தான் நமக்குத் தோன்றுகிறது.

'விளம்பு' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? சொல் பெருமையாகப் பேசு, பெருமைப்படு, பெருமை யடித்துக்கொள், பரப்பு என்றெல்லாம் இதற்குப் பொருள்கள் உண்டு. 'உன்னிடம் உள்ளதைச் சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளாதே' என்ற பொருளில் தான் 'உடையது விளம்பேல்' என்ற தொடர் உருவாகி இருத்தல் வேண்டும். தன்னிடம் உள்ளதைக் கர்வத்தோடு பிறர்க்குச் சொல்லி அவரிடம் அந்தப் பொருள் இல்லை என்பதைக் குத்திக்காட்டிப் பேசும் போது சமுதாய உறவு கெடுகிறது. அதனால்தான் 'உன்னிடம் உள்ளதைக் காட்டி அல்லது கூறிப் பெருமையடித்துக்கொள்ளாதே என்று அவ்வையார் அறிவுரை சொல்லுகிறார்.

'விளம்பு' என்ற சொல் இன்றும் பேச்சு வழக்கில் 'கர்வமாகப்பேசு' 'விளம்பரப்படுத்து' 'பரப்பு' முதலான பொருள்களில் வழங்கிவருகிறது என்பதை ஊன்றிக் கவனிக்கும் போது நாம் மேலே கூறிய விளக்கம் மிகவும் பொருத்தமானதகவே தோன்றுகிறது.

முற்றும்.

## பண்புடைய வாழ்க்கை

பணத்தால் வாழலாம் என்று எண்ணி
கனவு காண்பது வீணாகும்
குணத்தால் மட்டுமே நல்வாழ்வு
நீண்டு நிலைத்து வாழலாம்

ஏழைகள் உழைப்பை உறிஞ்சியே
பணத்தைச் சேர்க்கக் கூடாது
பிறரை ஏமாற்றிப் பிழைத்திட
எண்ணம் கொள்ளக்கூடாது

பணத்தை மட்டும் சேர்ப்பதால்
பண்பு நிலைத்து நிற்காது
மனத்தால் வாழும் வாழ்கையே
மாண்புடைய வாழ்கையே.

ஆசி.கண்ணம்பிரத்தினம்
அறிவூட்டும் சிறுவர் பாடல்கள்.

## சிலம்பும் பண்பாடும்.

**சிலம்பு**

சிலம்பு என்ற சொல்லுக்கு ஒலி,மலை,பக்கமலை, காலணி போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்குக் காலணியின் அடிப்படையில் அமைந்த சிலப்பதிகாரம் என்ற நூலைக் குறிக்கிறது.

**நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணிஆரம் படைத்த தமிழ்நாடு**

என்று சொன்னார் பாரதி. காலணியில் அமைந்த காப்பியத்தைக் கழுத்தணியாக மாற்றுகிறார் பாரதி.

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய, இன்று கிடைக்கின்ற காப்பியங்களுள் முதல்காப்பியம். முதன்மையான காப்பியம் முத்தமிழ்க் காப்பியம் முத்தமிழ் நாட்டை முழுத்தமிழ் நாடாக்க முயன்ற காப்பியம். தமிழில் தோன்றிய ஒரே முத்தமிழ்க் காப்பியம் அதற்குப் பின்பு முத்தமிழ்க் காப்பியங்கள் தமிழில் தோன்றவில்லை.

தொடரும்.

**பாரில் மொழிகளில் பக்தியை பெருக்குவது பைந்தமிழே
பரமனின் உள்ளத்தை பருகி உவப்பது செந்தமிழே.**

தமிழ்த் தூது தனிநாயக அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தினரால் புங்குடுதீவில் நடத்தப் பெற்ற தமிழ் நெறிக்குறளாயத் திருமணத்தின் காட்சிகள் சில.






மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் இருக்க வைத்து பலர் அறியச் செய்தலும், திருவள்ளுவர் வழிபாடு, சான்றோர் வழிபாடு, பெற்றோர் வழிபாடு செய்தலும் இருவரும் உறுதிமொழி எடுத்தலும், தமிழ் அறிஞர்களைக் கொண்டு அல்லது ஊர்ப் பெரியவர்களைக் கொண்டு அறிவுரையும், அறவுரையும் கூறுதலும், தமிழில் நடைபெறும். திருமணத்தில் இன்றியமையாததாகும். தமிழ் மக்கள் தங்கள் திருமணங்களை தமிழில் செய்ய முன்வரவேண்டும்.

### வள்ளலாரும்....

4. ஒன்பது வயதில் அவரது ஆசிரியர்.

**ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்,**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்,**
**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்,**
**வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.**

என உலக நீதியைச் சொல்லச் சொல்லியும் இவர் சொல்லாதிருந்தார். 'ஏன் சொல்லவில்லை?' என்று ஆசிரியர் கேட்டபோது, 'இறைவனிடத்திலே வேண்டாம், வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டிருப்பானேன். 'ஏதாவது வேண்டும், வேண்டும்' என்று எதை வேண்டலாம் என எண்ணிக் கொண்டிருந்தேன் என்றார். 'நீ வேண்டுமானால் வேண்டும் வேண்டும் எனப்பாடு' என்று ஆசிரியர் கட்டளையிட, உடனே 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்ற பாடலைப்பாடியது.

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்.

### தமிழ் எழில் வாசகர்களுக்கு...

தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்படும் காலாண்டு இதழில் வரும் தமிழ் களஞ்சியத்தகவல்கள் அனைத்தையும் வாசிக்கும் வாசகர்களுக்கான எழுத்துத்தேர்வு வருடந்தோறும் சிலை(மார்கழி) திங்களில் நடைபெறும். இதில் வெற்றிபெறும் வாசர்களுக்கு

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | - உருபா | 3000.00 |
| 2 ஆம் பரிசு | - உருபா | 2000.00 |
| 3 ஆம் பரிசு | - உருபா | 1000.00 |
| ஆறுதல் பரிசு | - உருபா | 500.00 |

(ஆறுதல் பரிசு 10 பேருக்கு வழங்கப்படும்.)

### எங்கும் எதிலும்.....

2. மொழியால் இனம் அமைவதும் நாகரிகம் அமைவதும் நாடு அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள்.

3. அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாகாணம் கட்டாயமாக ஏற்படும் போது ஆளுநர் தமிழில் கையெழுத்து இடுவதும் கனவு அல்ல. வங்காளத்திற்குத் தொண்டு செய்யச் சென்று முதுமையில் எழுபத்தெட்டாம் அகவையில் அந்நாட்டு மொழியில் கையெழுத்திட வேண்டும் என்று வங்காளி எழுத்தைக் கற்றுக்கொண்ட காந்தியடிகளின் பெருந் தன்மையான நெறி அது. ஆகவே இன்று தமிழர்க்கு வேண்டியது அன்றாடக் கடமையைப் பற்றிய ஆராய்ச்சியே. மொழிப் பற்றையும், நாட்டுப்பற்றையும் செயலில் காட்டும் முறையே.

4. தாகூரையும், காந்தியையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ? அவர்களை விடத் தாய் மொழிப்பற்றுக் கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர்களை விட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்கவேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னால் சொல்கிறவர்களின் மூளையில் நஞ்சு சுரந்து கிடக்கின்றது. என்றே உணரவேண்டும்.

5. தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து, ஒற்றுமைப்படுத்த வல்லது, தமிழ். ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிர தமிழுக்கு எதிர்காலமில்லை என நம்பு, ஆட்சிமொழி தமிழ் சட்டமன்றம் முதல் நீதிமன்றம் வரை வழங்கவேண்டும். கல்வி மொழியென்றால் எவ்வகை கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலே கற்பிக்கவேண்டும். குறைகள் பல இருக்கலாம், குறைகளுக்காக தயங்காமல் ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆக்க வேண்டும் என்று உணர்ந்திடு.

6. இவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் போதாது. உன்னால் ஆனவரையில் செய் கடிதம். பண விடைத்தாள், விளம்பரப் பலகை விற்பனை சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. (மராத்தியர் குயராத்தியர் முதலானவர்களிடம் இந்த வழக்கம் உள்ளது.) இவற்றை தமிழில் எழுதினால் அஞ்சல்காரர்கள் வியாபாரிகள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழ் படிக்கச் செய்வது போல் ஆகும். இல்லையானால் அவர்கள் தமிழை மறக்கும்படி செய்வது போல் ஆகும். நீ யாருடனும் தமிழிலேயே பேசு,(உலகத்தார் எல்லோரும் அவரவர் தாய் மொழியில் தான் பேசுகிறார்கள்) தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டுமே பிற மொழியில் பேசு திருமணம் வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து.

7. வெளிநாட்டுத் துணியை விலக்குதல் போல தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித்தாள்களை விலக்கு. நாட்டுக்கும், மொழிக்கும் இடையூறான நிலையங்களைப் போற்றாதே. நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உடையவர் நடத்தும் உணவு விடுதி, மருந்துக்கடை, துணிக்கடை முதலியன சிறிது தொலைவில் இருந்தாலும், விலை சிறிது கூடுதலாக இருந்தாலும், வேறு குறை இருந்தாலும் அங்கேயே சென்று வாங்கு. அவசரத்தின் காரணமாகவோ, வேறு காரணத்தாலோ தவறு நேர்ந்திருந்தால் தவறு என்று உணர்ந்துவருந்து.

தமிழை ஒவ்வொரு துறைதோறும் வளர்க்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். 'தமிழனுக்கு வீழ்ச்சி இல்லை' என்று பாரதிதாசன் பாடியது உண்மையாக வேண்டுமானால் தமிழ் நாடு, தமிழ் மக்கள், தமிழ் என்னும் பேருணர்ச்சியில் மூழ்கி முகிழ்வது தவிர வேறு வழியில்லை. தமிழால் வாழ்ந்தோர் பலர். தமிழுக்கென வாழ்ந்தோர் சிலர். தமிழ்த் தொண்டு மூலம் அனைத்தையும் தழுவி, தமிழே தாமாகத்தாமே தமிழாகி வாழ்ந்து தமிழ்க் குமுகாயம் தலை சிறந்து விளங்க, தமிழ் மொழி விடுதலைக்கு ஒரு தனி வழி கண்டு, அயராது உழைப்போம், எங்கும் எதிலும் தமிழை நடைமுறைப் படுத்துவோம். தமிழர் வாழ்வில் தமிழ் தழைத்தோங்கட்டும்.

நன்றி

முனைவர் மு.வ

தம்பிக்கு

## சான்றோர்கள் சொன்னவழி நடப்பது ஒன்று, தமிழ் வரைந்த கோடுகளை மதிப்பது ஒன்று.

முனைவர் சாலை இளந்திரையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org